House-Surgeons

* 312 Q.—THIRU M. AIYASWAMY: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) the number of M.B.B.S. doctors who are not yet appointed as House-Surgeons ; and

(*b*) the steps taken by the Government to appoint them as House-Surgeons ?

அவுஸ் ஸர்ஜன்கள்

திரு. எம். அய்யாசாமி : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எம்.பி., பி.எஸ். பரீட்சையில் தேர்வு பெற்றவர்கள் அவுஸ் சர்ஜன்களாக நியமனம் செய்யப்படாமல் எத்தனை பேர்கள் உள்ளனர் ?

(இ) அவர்களை நியமனம் செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஒருவருமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Bharathi Narayanasamy School, Chillamarathupatti

* 313 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the management of the Bharathi Narayanasamy High School and Elementary School at Chillamarathupatti near Bodinayakkanur of Madurai district is not functioning properly ;

(*b*) the action taken thereon by the Education Department ;

(c) whether the post of teacher is vacant without being filled up ; and

(*d*) whether the management of the school will be entrusted to the District Educational Officer?

சில்லமரத்துப்பட்டி பாரதி நாராயணசாமி பள்ளி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டம் போடிநாயக்கனூரை அடுத்த சில்லமரத்துப்பட்டி பாரதி நாராயணசாமி உயர்நிலைப்பள்ளி ஆரம்பப் பள்ளி மேலாண்மையினர் சரிவர செயல்படவில்லையா ?

(இ) இதுபற்றி கல்வி இலாகா எடுத்த நடவடிக்கை என்ன ?

(உ) புதிய ஆசிரியர்கள் நியமனம் செய்ய முடியாமல் ஆசிரியர் ஸ்தானம் காலியாக உள்ளதா ?

(எ) மேலாண்மை வேலை மாவட்ட கல்வி அதிகாரி பொறுப்பில் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1965-ம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டுவரை இப்பள்ளியின் மேலாண்மை குறித்து தகராறு இருந்து வந்தது. மேற்படி பள்ளியின் பணியாளருக்கு ஏற்படவிருந்த கஷ்டத்தைத் தவிர்ப்பதற்காக தலைமையாசிரியர் மூலமாக சம்பளம் பட்டுவாடா செய்ய உத்தரவிடப்பட்டது. அத் தகராறு தற்சமயம் தீர்ந்துவிட்டது.

(உ) இல்லை.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.